# அல்லாஹ்வின் தூதர்

பாடம் 19

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யாக் காலத்தில் மக்காவில் பிறந்தார்கள். ஜாஹிலிய்யாக் கால மக்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள். கோத்திரங்களாகப் பிரிந்து இருந்தார்கள். கோத்திரப் பெருமைக்காக யுத்தம் செய்தார்கள். சிறிய விடயங்களுக்காக வருடக் கணக்கில் போர் செய்தார்கள். அவர்கள் மது அருந்தி சூதாடி மகிழ்வடைந்தார்கள். வட்டி வாங்கினார்கள். அடிமைகளை வைத்திருந்தார்கள். பழிக்குப்பழி வாங்குவதில் கண்ணாயிருந்தார்கள். பெண்களை இழிவாகக் கருதினார்கள். அவர்களில் மிகச் சிலருக்கே எழுத வாசிக்கத் தெரிந்திருந்தது.

இந்த நிலையைக் கண்ட முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அதிகம் கவலைப்பட்டார்கள். அவர்களைத் திருத்துவதற்காக வழி தேடினார்கள். ஹிறாக் குகையில் தனித்திருந்து தியானித்தார்கள். இதற்கு ஒரு வழி கிடைக்காதா என யோசித்தார்கள்.

அப்போதுதான் அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) என்ற மலக்கை அனுப்பி வைத்தான். அவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "ஓதுவீராக" என்று கூறினார். அப்போது முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது என்று கூறினார்கள். பின்னர் முஹம்மத் நபி

(ஸல்) அவர்களைக் கட்டியணைத்து

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِىْ خَلَقَ ۝ خَلَقَ الْاِنْسَانَ مِنْ
عَلَقٍ ۝ اِقْرَاْ وَرَبُّكَ الْاَكْرَمُ ۝ الَّذِىْ عَلَّمَ بِالْقَلَمِ ۝
عَلَّمَ الْاِنْسَانَ مَا لَمْ يَعْلَمْ ۝

என்ற அல்குர்ஆன் வசனங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அதனை மனனம் செய்து கொண்டார்கள். இதுவே முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்குக் கிடைத்த முதல் வஹியாகும். அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்குக் கிடைக்கின்ற போதனையே வஹி எனப்படுகிறது. வஹி இறக்கப்பட்ட வர்களே அல்லாஹ்வின் தூதர், ரஸூல், நபி என அழைக்கப்பட்டார்கள். நபிப்பட்டம் கிடைத்ததையே நுபுவ்வத் என்று கூறுகின்றோம்.

இதன் பின்னர் அல்லாஹ் நபி(ஸல்) அவர்களுக்கு சிறிதுசிறிதாக வஹியை இறக்கிக் கொண்டிருந்தான். முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அவற்றை மக்களுக்கு ஓதிக் காட்டிப் போதனை செய்தார்கள். அப்போதனை களைச் சிலர் ஏற்றுக் கொண்டார்கள். பலர் ஏற்றுக் கொள்ள வில்லை. ஏற்றுக் கொள்ளாத மக்கள் நபியைத் தூசித் தார்கள். கொடுமைப்படுத்தினார்கள். எனினும், முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் பொறுமையாக இருந்து

23 வருட காலமாக மக்களை நல்வழியில் அழைத்தார்கள் அதில் வெற்றியும் அடைந்தார்கள்.

| |
|---|
| **முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார். அவர் எல்லோரதும் தலைவராவார்.** |

## பயிற்சி

**சுருக்கமாக விடை எழுதுங்கள்.**

(1) ஜாஹிலிய்யாக் கால மக்கள் எவற்றை வணங்கினார்கள்?

(2) முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் எங்கு சென்று தியானித்தார்கள்?

(3) முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வஹி கொண்டு வந்த மலக்கின் பெயர் என்ன?

(4) முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்கு இறங்கிய முதலாவது வஹி எந்த அரபு வார்த்தையைக் கொண்டு ஆரம்பித்தது?

(5) அல்லாஹ்வினால் வஹி கொடுக்கப்பட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

(6) முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் எத்தனை வருடகாலம் நபித்துவப் பணியை நிறைவேற்றினார்கள்?

(7) வஹி என்றால் என்ன?